27th March 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : அம்மாதிரி ஒருவாறு சில கைத்தொழில்களாவது இருக்கக்கூடிய இடங்களை எடுத்தால்தான் அது நன்கு இயங்க முடியும். ஆகவே, அதுவும் மனதில் வைத்துக்கொள்ளப் படும்.

Women's College

* 436 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to open a college for women in the Kanyakumari district?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI T. T. DANIEL : In view of the fact that many of the girl students pass the E.S.L.C. Examination when they are hardly 15 years and in view of the fact that many parents do not desire to send their daughters to a men's college, will the Government be pleased to consider the desirability of extending financial assistance to any private institution which may be coming forward to open a women's college?

THE HON. SRI C. SUBRAMANIAM : The opening of a new college has got to be sanctioned by the University first and then alone the question of financial assistance by the Government arises. So, I would request the hon. Member to approach the University and if they give sanction for the opening of a new college, then the parties concerned may approach the Government for financial assistance.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES *RE* REDUCTION OF PAY SCALES OF SECONDARY TEACHERS IN ELEMENTARY SCHOOLS.

MR. SPEAKER : அன்பழகன் அவர்கள் 40-வது ரூல் பிரகாரம் அமைச்சர் அவர்களை ஒரு கேள்வி கேட்டிருக்கிறார். அன்பழகன் அவர்கள் அதைக் கேட்கலாம்.

THE HON. SRI C. SUBRAMANIAM: அதைப்பற்றிய முழு விவரங்களும் இந்த ஷார்ட் நோட்டீஸ் கொஸ்டினில் கொடுத்தாகிவிட்டது. ஆகவே இது அவசியமில்லை என்று நான் நினைக்கிறேன். 9-20 a.m.

MR. SPEAKER : I suppose it is acceptable to the hon. Member.

SRI K. ANBAZHAGAN : அவைத்தலைவர் அவர்களே, இந்த அவசரக் கேள்விக்கு கொடுத்த பதிலிலிருந்து இப்போதுள்ள நிலைமை என்ன என்று தெரிந்துவிட்டது என்று சொன்னாலும் இதனால் ஏற்பட்ட விளைவுகளைப்பற்றி விளக்குவதற்காக கொண்டு வந்திருக்கின்ற இந்த அவசர காரத்தின்மீது இரண்டு நிமிட நேரத்திற்குள் அதைப்பற்றி தெரிவிக்க விரும்புகிறேன். உண்மையாகவே மிக குறைந்த சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கின்ற அசிரியர்களின் சம்பளத்தை குறைப்பது என்று வருகிற பொழுது அவர்களுடைய நிலை என்ன என்பதை நாம் கவனித்துப் பார்க்க வேண்டும். ரூ. 42–2–85 என்று செக்ண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு என்று தெரிவிக்கப்பட்டிருந்தும் தனிப்பட்ட பள்ளிகளில் இருக்கும் செகண்டரி ஸ்கூல் ஆசிரியர்களுக்கு 40–1–48 என்று உத்தரவு பிறப்பித்து இருக்கிறார்கள். குறிப்பாக இருக்கக்கூடிய சம்பளத்தை கூட்டவேண்டும் என்று வேண்டுகோள் இருக்கின்ற நேரத்தில் திடீரென்று இவ்விதம் உத்தரவு பிறப்பிப்பது என்பது—தேள் ஒருதரம் கொட்டினாலும் கொட்டினதற்கு சமம் என்பதை நாம் உணர்ந்திருக்கவேண்டும். இந்த உத்தரவைப்பற்றி

கல்வி இலாகாவில் பரிசீலித்து கொண்டிருக்கும் நேரத்தில், அங்கங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் உத்தரவுகளை பிறப்பித்து கழிந்த மூன்று ஆண்டுகளாக வாங்கின கூடுதல் சம்பளத்தையும் திருப்பி கட்டவேண்டும் என்று உத்தரவு போடும்பொழுது மிகவும் வேதனை ஏற்படுகிறது. இம்மாதிரி பரிசீலனையில் இருக்கும் உத்தரவுகளை அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் பிறப்பிக்கக்கூடாது என்று அமைச்சர் அவர்களையும், அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய குறைகள் எவ்வளவோ இருக்கின்ற இந்த நேரத்தில் இம்மாதிரியான உத்தரவுகளை தனியார்கள் பிறப்பிக்கக் கூடாது என்பதை வலியுறுத்தவேண்டும் என்பதை அரசாங்கத்தின், முக்கியமாக அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, இதைப்பற்றி எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைப்பற்றி நான் கேள்விக்கு பதில் அளித்தபோதும் குறிப்பிட்டேன். அதை கூடுதலாக விளக்க விரும்புகிறேன். அரசாங்க பள்ளிகளிலும் ஸ்தல-ஸ்தாபனங்கள் நடத்தக்கூடிய பள்ளிகளிலும் லோயர் எலிமெண்டரி ஸ்கூல்களில் செகண்டரி பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமிப்பது இருந்துகொண்டிருக்கிறது என்றாலும் சர்க்காருடைய அனுமதியைப் பெற்றுத்தான் இவ்விதம் நியமிக்கவேண்டும் என்று இருக்கிறது. ஆகவே சர்க்காரும் ஸ்தல ஸ்தாபனங்களும் நடத்தக் கூடிய பள்ளிக்கூடங்களில் ஸாங்ஷண்டு போஸ்டுக்கு செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு 45–2–85 என்றுள்ள சம்பளத்தை கொடுக்கலாம் என்று உத்தரவு போட்டோம். இந்த ஸாங்ஷண்டு போஸ்டு விஷயத்தில் அதை பரிசீலனை செய்துகொண்டிருக்கும் நேரத்தில் இந்த விஷயத்தைப்பற்றி காரியதரிசி அளவுக்கு வாராமலே ஸாங்ஷண்டு போஸ்டு தனியார் நடத்தும் பள்ளிக்கூடங்களில் ஹெட்மாஸ்டருக்குத்தான் இருக்கமுடியும் என்று மற்ற எல்லோருக்கும் இந்த முறை செல்லாது என்கின்ற அடிப்படையில் அவர்களாகவே நினைத்துக்கொண்டு வாங்கின கூடுதல் சம்பளத்தை திருப்பிக் கட்டவேண்டும் என்று உத்தரவு போட்டுவிட்டார்கள். பின்னால் இந்த மாதிரி புகார் வந்த உடன் உடனடியாகவே இதைப்பற்றி அறிக்கை கேட்டு இம்மாதிரி சம்பளம் திருப்பி கொடுக்கவேண்டியதில்லை, தொடர்ந்து 42–2–85 என்கிற சம்பளத்தை கொடுத்துவரவேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறோம். ஆனால் லோயர் எலிமெண்டரி ஸ்கூல்களில் செகண்டரி ஆசிரியர்களை நியமிப்பதால் அரசாங்கத்திற்கு கஷ்டங்கள் ஏற்படுகிறது. அதாவது சம்பள விகிதம் இவர்களுக்கு அதிகமாக இருப்பதால் சர்க்கார் அதிக கிராண்டை கொடுக்கவேண்டியிருக்கிறது. மேலும் ஹையர் எலிமெண்டரி ஸ்கூல்களுக்கு செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் அதிகமாக வேண்டியிருக்கிறார்கள். இவ்விதம் லோயர் எலிமெண்டரி ஸ்கூல்களுக்கு செகண்டரி ஆசிரியர்களை நியமித்தால் ஹையர் எலிமெண்டரி ஸ்கூல்களுக்கு இல்லாமல் போய்விடும். மேலும் ஹையர் எலிமெண்டரி ஸ்கூலில் பாஸ் பண்ணினவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டியிருக்கிறது. செகண்டரி ஆசிரியர்களை ஹையர் ஸ்கூலில் நியமித்துக் கொள்ளலாம் என்று ஏற்பட்டால் இவர்களுக்கு வேலை கிடைக்கக்கூடிய வாய்ப்பு இல்லாமல் போய்விடும்: மேலும் தனியார் பள்ளிகளில் அதாவது லோயர் எலிமெண்டரி ஸ்கூல்களில் 1–4–58-க்கு பின்னால் ஆசிரியர்களை நியமிக்கும்பொழுது சர்க்காருடைய அனுமதி பெற்றுத்தான் நியமிக்கவேண்டும் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. மேலும் 59–60-வது வருடத்திலிருந்து 5-வது வகுப்பிலேயிருந்து ஆங்கிலம் சொல்லிக்கொடுக்கவேண்டியிருப்பதால் குறைந்தது ஒரு செகண்டரி கிரேட் ஆசிரியர் இருக்கவேண்டியிருக்கிறது. ஆகவே இப்போது ஆங்காங்கு இருக்கிற அதிகாரிகளுக்கு வேண்டிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இப்போது இந்த தவறு ஏற்பட்டதற்கு நான் வருந்துகிறேன். நம்மை அறியாமலே சில சமயங்களில் இம்மாதிரிப்பட்ட தவறுகள் வந்துவிடுவது இயற்கையாக இருக்கிறது. இவ்விதம் ஏற்படாமல் இருப்பதற்கும் வேண்டிய முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.